# தமிழ் மொழியில் மறுமலர்ச்சி இலக்கியத்தை உருவாக்கியவர்கள்!

## நேற்றைய தொடர்ச்சி...

**முரசொலி மாறனை எல்லோருக்கும் ஒரு அரசியல்வாதியாகத்தான் தெரியும். பொதுத் தளத்தில் அவர் அப்படித்தான் அறியப்பட்டிருக்கிறார். ஆனால், அவர் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்பது பலரும் அறியாத ஒன்று. 'வால்நட்சத்திரம்', 'செத்தும் கொடுத்தவன்', 'காட்டாறு', 'காட்டுப்பூனை', 'இலட்சியப் படம்', 'அன்பின் அருவி', 'காகிதப் படகு' போன்ற கதைகள் முரசொலி மாறனை மிகச் சிறந்த சிறுகதை ஆசிரியர் என்று நிரூபிக்கின்றன.**

'வால்நட்சத்திரம்'ஒரு எழுத்தாளனைப் பற்றிய கதை. லட்சிய நோக்கோடு எழுதுகிற எழுத்தாளர்களின் வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கிறது, ஆபாச குப்பைகளை எழுதுகிறவர்களின் வாழ்க்கைத் தரம் எப்படியிருக்கிறது என்பதைச் சொல்வதுதான் 'வால் நட்சத்திரம்' கதை.'செத்தும் கொடுத்தான்' ஒரு பிரபலமான நடிகரைப் பற்றிய கதை. நடிகரின் நண்பர், நடிகர் இறந்த பிறகு அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை ரகசியங்களை எழுதி, வியாபாரப் பண்டமாக்கி பணம் சம்பாதிக்கிறார். இதற்கான வழிமுறையைச் சொன்னவர் சம்பந்தப்பட்ட நடிகர்தான். தமிழ்ச் சமூகம் சினிமா நடிகர்களின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் மீது தீயை வைக்கும் கதை. 'தாமரையின் உறவு' நிறைவேறாத காதல் கதையாக இருந்தாலும், லட்சியம் பேசுகிறது.

தி.மு.க. எழுத்தாளர்களின் நோக்கமே 'லட்சிய' கதாபாத்திரங்களை உருவாக்கிக் காட்டுவதுதான். அவர்களுடைய லட்சியங்கள்தான், அவர்கள் எழுதிய கதைகளுக்கான இலக்கிய அழகு, மதிப்பு, பெருமை. சினிமா தயாரிப்பாளர், நடிகர், நடிகைகளின் நிலை பற்றி முரசொலி மாறன் தெளிவாகவும் அழகாகவும் எழுதியிருக்கிறார். தமிழ்நாட்டில் பெரிய தொழிற்சாலையாகச் செயல்படுகின்ற சினிமாத் துறை சார்ந்து எவ்வளவு கதைகள் எழுதப்பட்டிருக்கும்? இத்துறை சார்ந்து விமர்சனக் கண்ணோட்டத்துடன் நிறைய எழுதப்பட வேண்டும் என்பதை முரசொலி மாறனின் கதைகள் நமக்குச் சொல்லித் தருகின்றன.

**'எச்சில் கனி', 'காதல் கதை', 'இன்னும் ஒன்று', 'ஞானப் பிறப்பு' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை எழுதியவர் ப. புகழேந்தி.** இவருடைய கதைகளில் 'கடிதம்', 'அபரஞ்சி', 'உறவு', 'அர்த்தம்', 'மகனும் மங்கையும்', 'புயல் நிவாரண நன்கொடை', 'ஒரு காதல் கதை'ஆகியவை மிகவும் முக்கியமானவை. 'அறியாமை ஒழிக, பகுத்தறிவு வளர்க, சாதிப் பிரிவினை ஒழிக' என்ற முழக்கத்தோடுதான் மகனும் மங்கையும் கதை ஆரம்பிக்கிறது, 'வீதிக்கொரு சாமியும், சாமிக்கொரு பூசாரியும் வேண்டாம் என்றுதான் சொல்கிறோம்' என்று ஒரு இடத்திலும், 'சாதி இல்லை என்று சொல்லும் யாராவது தாழ்ந்த சாதியாரிடம் பெண் கட்டியிருக்கிறார்களா?' என்று ஒரு இடத்திலும் வருகிறது. இந்த வரிகள் ப. புகழேந்தியின் கதைகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இவருடைய கதைகள் நேரடியாகப் பேசும் இயல்பைக் கொண்டிருக்கின்றன. 'புயல் நிவாரண நன்கொடை' கதையில் சிறிய தொகையைக் கொடுத்துவிட்டு, பெரிய தொகையைக் கொடுத்ததுபோல் பேப்பரில் எழுதிவைக்கும் நபரைப் பற்றி பேசுகிறது. ப. புகழேந்தியை ஒரு நல்ல சிறுகதை எழுத்தாளர் என்று தயக்கமின்றி சொல்லலாம். பிறப்பின் பெயரால், கடவுளின், மதத்தின், சாதியின் பெயரால் வெளிப்பட்ட ஆணவத்திற்கு எதிராகவும் வலிமையாகவும் ஒலித்ததுதி.மு.க. எழுத்தாளர்களின் குரல். அதில் ப. புகழேந்தியின் குரலும் சேர்ந்திருக்கிறது.

**திருச்சி செல்வேந்திரனைப் பேச்சாளர், கட்டுரையாளர் என்றுதான் பலரும் அறிந்திருக்கிறார்கள். அவருடைய சிறுகதைகளைப் படித்த பிறகுதான், அவர் மிகச் சிறந்த சிறுகதையாசிரியர் என்பது தெரிந்தது.** 'அவளைத் தேடி', 'சீதா ரகசியம்', 'இராமனுக்கே சீதையென்று வாழ்ந்தாள்', 'கோட்சேவுக்குக் காந்தியார் கோயில் கட்டுகிறார்', 'ஊருக்குள் ஒரு உலகம்' போன்ற கதைகள் செல்வேந்திரனின் எழுத்து வன்மைக்குச் சான்றாக இருக்கின்றன. 'சீதா ரகசியம்', 'இராமனுக்கே சீதையென்று வாழ்ந்தாள்', இரண்டு கதைகளும் இராமாயணக் கதையைப் பகடி செய்யும் விதமாக எழுதப்பட்டுள்ளன. இராமனுடைய நடத்தை கேள்விக்குட்படுத்தப்படுகிறது. இந்த இரண்டு கதைகளும் தர்க்கரீதியாக விவாதித்து, வாசகனுக்குத் தெளிவை ஏற்படுத்துகின்றன.

'கோட்சேவுக்குக் காந்தியார் கோயில் கட்டுகிறார்!' கதை முற்றிலும் அரசியலை மையப்படுத்தியது. கோட்சே கொன்றிருக்காவிட்டால் காந்தியின் நிலை என்னவாகியிருக்கும்? பரிதாபம்தான். காங்கிரஸ்காரர்களைவிடவும் காந்திக்கு நன்மை செய்தவர் கோட்சேதான். காந்தி பெயர் இருக்கும்வரை கோட்சே பெயரும் இருக்கும். நல்ல முரண். சொர்க்கத்துக்குப் போன காந்தி, மீண்டும் பூமிக்கு வந்து, தான் உருவாக்கிய மதிப்பீடுகள் எப்படிச் சீரழிந்து கிடக்கின்றன என்பதைப் பார்த்து மனம் நொந்த நிலையைப் பற்றி செல்வேந்திரன் எழுதியிருக்கிறார்.

கதையில் வரும் ஒரு வரி மிகவும் முக்கியமானது. 'கோட்சேவுக்குக் கோயிலைக் கட்ட ஒரு கட்சியே இருக்கு. அதோ பார்'என்று எழுதப்பட்டதை, இப்போது நாம் நிஜத்தில் பார்க்கிறோம். அந்தக் கட்சி எது என்பது இந்தியர்கள் அனைவருக்கும் தெரியும். பாபர் மசூதி இடிப்பு சம்பவமும் இக்கதையில் இடம்பெற்றிருக்கிறது.

**சி.பி. சிற்றரசு.** 'இரத்தத் தடாகம்', 'சேரன் நாட்டு அதிபதி', 'தங்க விலங்கு', 'போர்வாள்' போன்ற பல நாடகங்களையும் 'புறப்படு மகனே', 'கபாடபுரம்' போன்ற தொடர்களையும் எழுதியவர். 'சோகச்சூழல்' இவருடைய சிறுகதைத் தொகுப்பு. 'சோகச்சூழல்', கதை சமூகத்தில் வறுமையும் பிணியும் சமூக ஒதுக்குதலும் ஏற்படுவதற்கு, நம்முடைய சமூகக் கட்டமைப்புதான் காரணம் என்று சொல்கிறது. சமூக கட்டமைப்பை மாற்ற வேண்டும் என்பதுதான் சி.பி. சிற்றரசுவின் எழுத்தின் நோக்கம். சிறுகதைகள் எழுதுவதைவிட இவருக்கு அதிக விருப்பமான கலை வடிவமாக இருந்தது நாடகமும் நாவலும்தான். வரலாற்றில், படிக்கவும் எழுதவும் சிந்திக்கவும் வைத்தவர்கள், தி.க., தி.மு.க. எழுத்தாளர்கள்தான். எது உண்மை, எது பொய் என்று அறிந்துகொள், அதற்கு படி என்று சொன்னவர்களில் சி.பி. சிற்றரசுவும் ஒருவர்.



'மனப்போர்' என்ற நாவலை எழுதியவர் **தில்லை வில்லாளன் .** அவருடைய 'கதம்பம்' என்ற சிறுகதைத் தொகுப்பில் 'தழுவும் துருவங்கள்', 'சீதையை மணந்த இராவணன்', 'செல்லாயி', 'வெள்ளிப் பணம்', 'கருங்குழி பார்சல்' போன்ற கதைகள் என்றென்றும் படிக்கத் தக்கவை. 'செல்லாயி' மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள உறவைப் பற்றிப் பேசுகிறது. மனிதர்களுக்கு இயற்கையுடனும் விலங்குகளுடனும் இணைந்த வாழ்வுதானே. 'வெள்ளிப் பணம்' கதையில் 'பணம்' என்பது மனிதர்களை எப்படி இரக்கமற்றவர்களாக மாற்றுகிறது என்பதைப் பார்க்கலாம். பணம் வரும்போது அதிகாரம் வருகிறது. அதிகாரம் வரும்போது பணம் வருகிறது. பணம் மனிதனைக் கொடூரமானவனாகவும் கருணையற்றவனாகவும் மாற்றிவிடுகிறது. பணத்தின் மதிப்பும் அழகும் அதுதான் என்பதை தில்லை வில்லாளனின் கதையின் மூலம் நாம் உணர்கிறோம். நம்முடைய சமூகத்தில் ஊழல் என்பது குற்றச் செயலாக இல்லாமல் பொதுப் பண்பாக மாறிவிட்டது என்பதைச் சொல்கிறது 'கருகுழி பார்சல்' கதை. 'சீதையை மணந்த இராவணன்' கதை இராமாயணத்தைப் புதுவிதமாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. தில்லை வில்லாளனின் சிறுகதைகள் நமக்குப் புது வாசக அனுபவத்தைத் தருகிறது.



**இமையம்**
எழுத்தாளர்

தி.மு.க.விலிருந்த பல தரமான எழுத்தாளர்களைப் பொது சமூகம் அரசியல்வாதிகளாக மட்டுமே பார்த்திருக்கிறது என்பதற்கு **இரா. செழியன்** நல்ல ஓர் உதாரணம். 'ராஜாதி ராஜா' என்ற நாவலையும் 'சமுதாய ரீதியில் அரசியல் அடிப்படை' என்ற கட்டுரை நூலையும்அவர் எழுதியிருக்கிறார். 'திராவிட நாடு' இதழில் பல சிறுகதைகளையும் எழுதியிருக்கிறார். தினமணியில் தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதியவர். இரா. செழியனுடைய புனைவிலக்கியங்கள் குறித்த ஆய்வு தேவைப்படுகிறது.

**பழைய காலத்தில்தான் தி.மு.க. எழுத்தாளர்கள் இருந்தார்கள். இப்போது யாரும் இல்லை என்று பலரும் சொல்கிறார்கள். அது உண்மை அல்ல. அறிவின் தொடர்ச்சி ஒரு போதும் அறுபடுவதில்லை. தற்காலத்தில், 'நான் தி.மு.க. எழுத்தாளன்', 'திராவிட இயக்க எழுத்தாளன்' என்ற அடையாளத்தோடும், கர்வத்தோடும் நாவல்கள், சிறுகதைகள் எழுதுகிறவர்கள் என்று இமையம், தமிழ் மகன், சல்மா, தளபதி ராஜ், மருத்துவர் சிவபாலன் போன்றவர்களைச் சொல்லலாம்.**

'பால்யம்', 'சாபம்' என்று இரண்டு சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார் சல்மா. 'விளிம்பு', 'குழப்பத்தின் சுற்றுப் பாதை', 'பால்யம்', 'சாபம்', 'கருகமணி டி.வி.' போன்ற கதைகள் வாசகர்கள் மனதில் வலியை ஏற்படுத்தக்கூடியவை. முஸ்லிம் சமூகத்திற்குள் பெண்களின் நிலை, அவர்கள் எதிர்கொள்ளும் குடும்ப, சமூக வன்முறையைப் பற்றி எழுதியிருக்கிறார். முந்தைய தலைமுறையினரின் அரசியல் புரிதலோடு, சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டும் 'கட்சிக்காரன்', 'நம்பாளு', 'பிராது மனு', 'ஆகாசத்தின் உத்தரவு' போன்ற கதைகளை இமையம் எழுதியிருக்கிறார். இவர் இதுவரை'மண்பாரம்', 'கொலைச்சேவல்', 'திருநீறு சாமி', 'நறுமணம்', 'நன்மாறம் கோட்டைக் கதை', 'வீடியோ மாரியம்மன்', 'சாவு சோறு', 'தாலி மேல சத்தியம்' என்று எட்டுச் சிறுகதைத் தொகுப்புகளை எழுதியிருக்கிறார்.

**தமிழ் மகன்,** 'மீன்மலர்', 'எட்டாயிரம் தலைமுறை', 'மஞ்சு அக்காவின் மூன்று முகங்கள், 'சாலை ஓரத்திலே வேலை அற்றதுகள்', 'அமில தேவைகள்' என்று ஐந்து சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். திராவிட இயக்க அரசியலையும், முன்பு தி.மு.க. எழுத்தாளர்கள் முன்வைத்து எழுதிய லட்சியநோக்கங்களையும் முழுமையாக ஏற்றுக்கொண்டு கதைகளை எழுதியிருக்கிறார். 'மஞ்சு அக்காவின் மூன்று முகங்கள்' மிகவும் கவனிக்கத்தக்க கதையாகும்.

**தளபதி ராஜ்,** 'நாலு தெரு கதெ' என்ற ஒரு நாவலை எழுதியிருக்கிறார். மருத்துவர் சிவபாலன் 'உயிர் நதி' என்ற நாவலை எழுதியிருக்கிறார்.

**கட்டுரைகளை இலக்கியத் தரத்துடன் எழுதுவதற்கு இன்றைய காலகட்டத்தில் தி.மு.க.விலும், திராவிட இயக்கத்திலும் பலர் இருக்கின்றனர். ப. திருமா வேலன் 'பெரியோர்களே, தாய்மார்களே' என்ற கட்டுரை நூலோடு மொத்தம் 17 நூல்களை எழுதியிருக்கிறார். பாமரன் 'நான் ஒரு தேச பக்தன் அல்ல' என்ற நூலோடு மொத்தம் 6 நூல்களை எழுதியுள்ளார்.**

**ஆ. ராசா '2G Saga Unfolds' என்ற ஆங்கில நூலையும், முத்துக்கள் மூன்று என்ற நூலோடு சேர்த்து ஐந்து நூல்களை இதுவரை எழுதியிருக்கிறார். 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்ற நூலோடு சேர்த்து கோ.வி. லெனின் ஏழு நூல்களை எழுதியிருக்கிறார்.**

**வழக்கறிஞர் அருள்மொழி எழுதிய, 'திராவிட இயக்கப் போராளிகள்'(பாகம் I, II) என்ற நூலை எழுதியிருக்கிறார். திராவிட இயக்கத்தில் பெண்களின் பங்களிப்பு எவ்வளவு மகத்தானதாக இருந்தது என்பதை இந்த நூலின் மூலம் தெரிந்துகொள்ள முடியும்.**

**க. திருநாவுக்கரசு எழுதிய நூல்களின் எண்ணிக்கை 20க்கு மேல் இருக்கும். திராவிட இயக்க வரலாற்று அறிஞராகப் போற்றப்படுபவர். 'சிந்திப்பதைத் தவிர வேறு வழியில்லை', 'திராவிட இயக்கங்களின் எதிர்காலம்' நூல்களோடு சேர்த்து, 11 புத்தகங்களை எழுதியிருக்கிறார் சுகுணா திவாகர்.**

**'புதிய கல்விக் கொள்கை எனும் மத யானை' என்ற நூலை அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுதியிருக்கிறார். நான் அறிந்தவரையில் ஒரு மாநிலத்தின் கல்வி அமைச்சர் ஆய்வு நெறியோடு கல்வித் துறையை, தேசியக் கல்விக் கொள்கையைப் பற்றி நூல் எழுதியிருக்கிறார் என்றால் இந்தியாவிலேயே அது மகேஷாக மட்டும்தான் இருப்பார் என்று நினைக்கிறேன். ஆய்வு நூல்தான். கட்டுரை நூல்தான். எழுதப்பட்ட விதத்தில் வாசக அனுபவத்தைக் கூட்டுகிறது.**

**கனிமொழி கருணாநிதி, தமிழச்சித் தங்கபாண்டியன், சல்மா, மனுஷ்ய புத்திரன் என்று கவிதை எழுதுவதற்கு தி.மு.க.வில் பலர் இருக்கிறார்கள். இவர்கள் கட்சி அடையாளத்தோடு இருந்தாலும், இலக்கிய உலகில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கவிஞர்கள்தான்.**

**கலைஞர் தன்னுடைய சுயசரிதையை 'நெஞ்சுக்கு நீதி' என்ற பெயரில் 6 பாகங்களாக எழுதினார். 'எனக்கு கலைஞரைப் போல் எழுத வராது' என்று சொன்னாலும் எளிய மொழியில் கச்சிதமான வாக்கிய அமைப்பில் படிப்பவர்களுடைய மனம் நெகிழும்படி,தன்வரலாற்றுக் கதையை, 'உங்களில் ஒருவன்' என்று மு.க.ஸ்டாலின் முதல் பாகத்தை எழுதி இருக்கிறார்.**

**'நானும் அவரும்' என்று துர்கா ஸ்டாலின் தன்வரலாற்றுக் கதை நூலை இரண்டு பாகங்களாக எழுதியிருக்கிறார்.**

திராவிட இயக்க, தி.மு.க. எழுத்தாளர்கள் இலக்கிய வகைகள் எத்தனை இருக்கிறதோ, அத்தனையிலும் தங்களுடைய பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். நாடகம் எழுதுவதற்குத்தான் இன்று தி.மு.க.வில், திராவிட இயக்கத்தில் ஆள் இல்லை. நாடகத்திற்கான இடத்தை சினிமாவும், சீரியல்களும் எடுத்துக்கொண்டது காரணமாக இருக்கலாம்.

**முன்பு எழுதிய, இப்போது எழுதிக்கொண்டிருக்கிற தி.மு.க. எழுத்தாளர்களுடைய எந்த ஒரு கதையிலும் 'எல்லாம் விதிப் பயன்', 'நான் வந்த வழி', 'என் தலை எழுத்து', 'ஆண்டவன் விதித்ததுபடிதான் எல்லாம் நடக்கும்', 'நம் கையில் என்ன இருக்கிறது', 'கடவுள் விட்ட வழி', 'எல்லாம் சுழிநாதம்', 'பாவம்', 'புண்ணியம்', 'கர்மவினை', 'முன்ஜென்மபாவம்', 'எல்லாம் தலையில் எழுதினது', 'ஆண்டவன் எழுதினது' என்பன போன்ற ஒரு சொல்லைக்கூடக் காண முடியாது. மூடநம்பிக்கை சார்ந்து ஒரு சொல்லை, ஒரு வாக்கியத்தைப் பயன்படுத்தியவர்களில்லை. அதே மாதிரி வடமொழி சொல்லைத் தவறியும் பயன்படுத்தியவர்களில்லை. பயன்படுத்தியிருந்தாலும் கேலி செய்வதற்காக மட்டுமே பயன்படுத்தி இருக்கிறார்கள்.விருக்ஷம், வாத்ஸல்யம், நமஸ்காரம், ஸலம், ஶ்ரீமான், ஶ்ரீமதி, மோக்ஷம், தாக்ஷண்யம், ஸ்நானம், வஸ்து, பரிக்ஷை, பாஷை, வஸ்திரம், ரிஷி, பக்ஷி, புஷ்பம், ஸ்திரி, லக்ஷணம் போன்ற சமஸ்கிருத சொற்களை முற்றிலுமாகத் தவிர்த்து முடிந்தவரை நல்ல தமிழில் எழுதினார்கள்.**

சாதிய இழிவுகள், பெண்கள் சந்திக்கும் சமூகக் கொடூரங்கள், விதவைகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள், ஆண்டான் அடிமை முறை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், கடவுள் மறுப்பு, புராண இதிகாச, பேய் கதைகள் பற்றிய மறுப்பு என்று கதைகள் எழுதாத ஒரு எழுத்தாளரை தி.மு.க.வில் காட்ட முடியாது. கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி, பெண் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி சாதி ஒழிப்பு, தீண்டாமை கொடுமைப் பற்றி ஒவ்வொருவருமே எழுதியிருக்கிறார்கள்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளை விமர்சிக்கும் கண்ணோட்டத்துடன் எழுதாத எழுத்தாளர் இல்லை. கௌதம புத்தரைப் பற்றி பலரும் எழுதியிருக்கிறார்கள். இராவணனுடைய நடத்தைப் பற்றி, இராமனுடைய நடத்தைப் பற்றி விமர்சனம் செய்து, கேள்வி கேட்டு பல கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. கலைஞரின் சிறுகதைகளில் கண்ணகியும் மாதவியும் மணிமேகலையும் பாரதிதாசனும் இடம்பெறுகிறார்கள். இதே போக்கில், 'தண்டகாரண்யத்தில் சீதை', 'திருநீறு சாமி', 'சாம்பன் கதை' என்று பல கதைகளை இமையம் எழுதியிருக்கிறார்.

வேதங்களுக்கு, சாஸ்திரங்களுக்கு, இதிகாசங்களுக்கு, மூடநம்பிக்கைகளுக்கு, சாதி இழிவுகளுக்கு, பெண்ணடிமைத் தனத்துக்கு எதிரான போராட்டமாகவே, யுத்தமாகவே எழுத்தை, இலக்கியத்தை உருவாக்கினார்கள் திராவிடஇயக்க, தி.மு.க. எழுத்தாளர்கள். சிறுகதைகள் படித்து ரசிப்பதற்காக மட்டும் அல்ல, அது சமூக அரசியலைப் பேசவும், கற்றுத்தரவும் வேண்டும் என்ற நோகத்திலேயே எழுதினார்கள். அரசு நிர்வாகத்தை, சமூக நிர்வாகத்தை விமர்ச்சிப்பதற்காகவே எழுதினார்கள். இலக்கியத்தின் நோக்கம் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதல்ல, புரிந்துகொள்ள வைப்பதே என்பதில் தெளிவாக இருந்தார்கள்.

சிறுகதைக்கான உள்ளடக்கம், உத்தி, வடிவம், மொழி, தொடக்கம், முடிவு என்பதற்கு முன்னுரிமை என்பதைவிடவும் கருத்துக்கு முன்னுரிமை கொடுத்தவர்கள், ஒரு கதையிலும் பேய், பூதம், பிசாசு, தெய்வங்கள் செய்த நற்காரியங்கள் பற்றி எழுதாதவர்கள். வைதீக வல்லாண்மையை ஒழித்து சமத்துவ சமூகத்தை உருவாக்க விரும்பி எழுதிய எழுத்தாளர்களுடைய படைப்புகள் 'அரசியல்' காரணங்களுக்காகவே, 'அனைவரும் சமம்' என்று எழுதியதற்காகவே புறக்கணிக்கப்பட்டன. பள்ளி, கல்லூரி, நூலகங்களில் இடம்பெறாமல் தடுக்கப்பட்டன. பிரச்சார இலக்கியம் என்று புறக்கணிக்கப்பட்டன. திராவிடக் கழக எழுத்தாளர்களுடைய எழுத்துகளை, தி.மு.க. எழுத்தாளர்களின் எழுத்துகளைப் புறக்கணித்தவர்கள் ஒருவிதத்தில் சமத்துவ சமுதாயத்தை, அறிவியல் பார்வையை விரும்பாதவர்கள்தான்.

'பவித்திரமானது', 'மேன்மையானது', 'உன்னதமானது', 'சீரியஸானது', 'புனிதமானது' இலக்கியம் என்ற கற்பிதத்தை உடைத்து, இலக்கியம் மக்களுக்கானது, அவர்களுடைய மொழிக்கானது, பண்பாட்டிற்கானது என்று நிரூபித்துக்காட்டியவர்கள். சமூக, பண்பாட்டுத் தளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள். எளிய மனிதர்களின் வாழ்க்கைக் கதையை இலக்கியமாக்கி, 'நீச பாஷை' என்று ஒதுக்கிய மக்களுடைய மொழியை இலக்கிய மொழியாக மாற்றியவர்கள். அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளை இலக்கியமாக்கியவர்கள் திராவிட இயக்க, தி.மு.க. எழுத்தாளர்கள்தான். அன்றாட நடப்பு அரசியலை சிறுகதைகளாக எழுதியவர்கள். தமிழ் மொழியில் மறுமலர்ச்சி இலக்கியத்தை உருவாக்கியவர்கள்.

**'குயில்' இதழை நடத்தியவர் பாரதிதாசன். 'பொன்னி' - முருகு சுப்ரமணியன், 'காஞ்சி' - அண்ணா. 'மன்றம்' நாவலர் - இரா. நெடுஞ்செழியன். 'புது வாழ்வு' - பேராசிரியர் க. அன்பழகன். 'தென்னகம்' - மதியழகன். 'தாய் நாடு' - டி.கே. சீனிவாசன், 'திராவிட நாடு' - அண்ணா. கலைஞர் நடத்திய 'முரசொலி' (சிறப்பு மலர்கள்) - 'தென்றல்' - கண்ணதாசன், 'தென்னரசு' - எஸ்.எஸ். தென்னரசு. போன்ற பத்திரிகைகள்தான் தமிழ்நாட்டில் புதுவிதமான இலக்கியத்தையும், இலக்கிய மொழியையும் உருவாக்கின. இன்றைய பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ், ஊடகத் தமிழ், மேடை தமிழ் என்பது தி.மு.க. எழுத்தாளர்களாலும்,திராவிட இயக்க, தி.மு.க.வினர் நடத்திய பத்திரிகைகளாலும் உருவாக்கப்பட்டது.**

**தி.மு.க.,திராவிட இயக்கஎழுத்தாளர்கள் எழுதிய கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், திரைக்கதை, வசனம் போன்றவையும் அவர்கள் நடத்திய பத்திரிகைகள் உருவாக்கிய மொழியும்தான் இன்றைய நவீனத் தமிழ் என்பது. பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தி வந்த வடமொழி கலந்த, சமஸ்கிருதம் கலந்த தமிழை மாற்றி, புதுத் தமிழை, மக்கள் தமிழை உருவாக்கிய சமூக மாற்றம், முன்னேற்றம் என்ற லட்சியத்திற்காக எழுதிய பண்பாட்டை, மீட்டுருவாக்கம் செய்வதற்காக எழுதிய திராவிட இயக்க, தி.மு.க.காரர்கள். ஒருவிதத்தில் கலகக்காரர்கள், மற்றொரு விதத்தில் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள்.**